DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 207/2024 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **மலையாண்டி** |
| Father's Name | : | அய்யாவு |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 50/2026 |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.02.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதகுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து கேபிள் டிவி நிறுவனம் தனியாக நடத்தி வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரி பாலமுருகன் என்பவரை எனக்கு தெரியும். அ.சா,1 புகழேந்தி என்பவரை தெரியும். அவர் ஏரியூரில் கேபிள் டிவி நடத்தி வருகிறார். சாட்சி மாரியப்பன் பட்டமங்களம் கேபிள் ஆபரேட்டர் ஆவார். கடந்த 23.01.2019 ம் காலை 6.30 மணியளவில் அ.சா,1 புகழேந்தி என்பவர் செல்போன் மூலமாக தனக்கு கேபிள் லைன் வரவில்லை என்றும் ஏதாவது பிரச்சினையா என்று கேட்டார். நான் உடனே இங்கு பிரச்சினை இல்லை என்றும் உடனே நான் வருவதாகவும் சொன்னேன்.

2. நானும், அ.சா,1 புகழேந்தி என்பவரும் ஏரியூர் சென்று பார்த்தபோது கேபிள் டிவி தெரியவில்லை என்று தெரிந்து மீண்டும் நானும் அ.சா.1 புகழேந்தி என்பவரும் அரளிக்கோட்டை சுடுகாட்டு பாதையில் திரும்பி வந்து

கொண்டிருந்தபோது அந்த இடத்தில் எதிரி பாலமுருகன் என்பவர் நின்று கொண்டிருந்தார். அப்போது சுமார் காலை 7.00 மணி இருக்கும். நானும் அ,சா.1 புகழேந்தி என்பவரும் கேபிள் லைனை ஏன் வெட்டிக் கொண்டிருக்கிறாய் என கேட்டபோது எதிரி தரக்குறைவான வார்த்தைகளால் அ.சா.1 புகழேந்தியை பேசினார். எதிரி பாலமுருகன் கையில் அருவாள் இருந்தது. எதிரி அருவாளை காட்டி மிரட்டியதால் நாங்கள் பயந்துகொண்டு அ.சா.1 புகழேந்தியிடம் காவல்நிலையம் சென்று புகார் கொடுக்கும்படி சொன்னேன். அதன்பிறகு நான் என்னுடைய இடத்திற்கு வந்துவிட்டேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எதிரி கேபிள் வயரை வெட்டியதை நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். சம்பவத்திற்கு முன்பு பலதடவை வெட்டியுள்ளார். அந்த பகுதி எனக்கு பாத்தியப்பட்ட பகுதி என்றால் இல்லை. அந்த பகுதியை கண்காணிப்பது யார் என்றால் அ.சா.1 புகழேந்தி. நான் கண்காணிக்கமாட்டேன். எதிரி கேபிள் வயரை எத்தனை துண்டுகளாக வெட்டினார் என்றால் சரியாக ஞாபகமில்லை. எவ்வளவு நீளம் வெட்டினார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 புகழேந்தியும் நானும் தொழில்முறையில் நண்பர்கள் என்றால் ஆமாம்.

2. எதிரி ஆயுதம் வைத்திருந்ததால் எனக்கு அச்சமாக இருந்ததை நான் போலிசார் விசாரணையில்சொன்னேனா என்றால் சொன்னேன். என்னை போலிசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் திருக்கோஷ்டியுர் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். என்று விசாரித்தார்கள் என்றால் சம்பத்தன்று விசாரித்தார்கள். எத்தனை மணி என்றால் ஞாபகமில்லை. போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை யார் விசாரித்தது என்றால் ஞாபகமில்லை. நான் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் புகழேந்தி எனது தொழில்முறை நண்பர் என்பதால் அவருக்கு ஆதவராக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் புகழேந்தியும் எதிரியின் கேபிளை வெட்டி திருடிச்சென்றுவிட்டோம் என்றும் அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக அ.சா.1 புகழேந்தி கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.03 14:14:03 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**